எண். 48 / 2026 நாள்: 14. 05.2026

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003

செய்தி வெளியீடு

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் உள்ள கள உதவியாளர் பதவிக்கான 1794 காலிப்பணியிடங்களுக்கான ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு தொழிற்பயிற்சி நிலை- II-க்கான அறிவிக்கை எண்.13/2025, நாள். 03.09.2025-க்கான தேர்வு முடிவுகள், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 09.04.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

2) மேற்குறிப்பிட்ட பதவிக்கான கணினி வழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு (Onscreen Certificate Verification) தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள், ஒட்டுமொத்த தரவரிசை எண், இடஒதுக்கீட்டு விதி, காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பதிவெண்கள் கொண்ட பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் 14.05.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்